7.12.2022

அ.வ.எண்.334/2017

வாசா.1 மந்திரியப்பன்

மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்து மானாவாரி பூமி என்றால் சரிதான். தாவா சொத்தை வில்லைக்கு வாங்குவதற்கு முன்பு பிரதிவாதியின் தகப்பனார் அனுபவித்து வந்தார் என்றால் தெரியாது. முத்துகவுண்டர் மற்றும் அருணாச்சலம் கவுண்டர் அப்பா பெயர் எனக்கு தெரியாது. நான் கிரையம்பெற்ற வாசாஆ.6 கிரைய ப்பத்திரத்தில் மூல ஆவணம் எதுவும் குிறிப்பிடவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் எனது வாசாஆ. 6 கிரைய பத்திரத்தில் மூல ஆவணத்தில் குிறிப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் பெறற்றவர்களுக்கு சொத்து பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்டது என்று எழுதப்பட்டிருப்பது நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் வாசாஆ.6 கிரையபத்திரத்தில் முத்துகவுண்டர் மகன் கருப்புசாமி என்றும் அருணாச்சலம் கவுண்டரின் மந்திரியப்பன் என்றும் ஆள்மாறட்டம் செய்துதான் வாசாஆ 6 கிரைய பத்திரம் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. செல்லப்ப கவுண்டர் மக்கள் கருப்புசாமி மற்றும் மந்திரியப்பன் என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையிருக்கும் போது 2ம் வாதி நாச்சிமுத்து 3ம் வாதி தங்கவேல்சாமிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2ம் வாதி நாச்சிமுத்து 3ம் வாதி தங்கவேல் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரமானது அவருக்கே உரிமை இல்லாமல் எழுதிக் கொடுத்துள்ளார் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. 3ம் வாதி தற்பொழுதுள்ள அரசாங்கத்தின் அவருக்குண்டான ஆளுமையை பயன்படுத்தி பட்டாவின் பெயர் மாற்றம் செய்துள்ளார் என்றால் சரியல்ல.நான் தாக்கல் செய்துள்ள 2, முதல் 5 மற்றும் 9 முதல் 12 ஆவணங்கள் இவ்வழக்கிற்கு உதவாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கும் கெட்ட எண்ணத்தில் வாசாஆ. 2 முதல் 5 மற்றும் 9 முதல் 12 ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் கோரும்

பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/மந்திரியப்பன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

N RENUGA

Digitally signed by N RENUGA
Date: 2022.12.19 16:41:43 +0530

District Munsif,
Sulur.